### த.வெ.க. ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகும்,

# பொறுப்பு இல்லாமல் பேசிக்கொண்டு இருக்கக்கூடிய ஒரு சூழல் நிலவுகிறது!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!





சென்னை, ஜூன்.13-

**சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், எழும்பூர் தெற்கு பகுதியில், மாவட்ட மகளிர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் மற்றும் புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு, “புத்தெழுச்சி-12: வாழ்த்தட்டும் பெண்மை! வளரட்டும் நன்மை!” எனும் தலைப்பில் மாவட்ட மகளிர் அணி கொண்டாடும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா சென்னை - வேப்பேரி, ஒய்.எம்.சி.ஏ டவுட்டன் ஹாலில் நடைபெற்றது.**

இந்நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

வாழ்த்தட்டும் பெண்மை! வளரட்டும் நன்மை! என்று பேச்சை தொடங்கிய கனிமொழி கருணாநிதி எம்.பி.; நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த சிறப்பான மகளிர் நடத்தும் இந்தக் கூட்டத்தில் மற்றெட்ட பெருமையும் மகிழ்ச்சியும் பெறுகிறேன்.

**மாவட்டச் செயலாளர்**
**சேகர்பாபுவுக்குப் பாராட்டு!**

எந்தக் கூட்டமாக இருந்தாலும், எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், தொடர்ந்து ஒரு மனிதன் எப்படி இப்படி உழைக்க முடிகிறது என்று எல்லாரையும் வியக்க வைக்கும் அளவுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், பல நேரங்களில் மகளிர்களை ஒதுக்குவதையே பணியாக சிலர் வைத்திருப்பார்கள். மகளிரை ஊக்கப்படுத்தி, அவர்களையும் அரவணைத்து தன்னுடைய மாவட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் நம் மாவட்ட கழக செயலாளர் சேகர்பாபு.

இந்த அரங்கத்துக்குள் நான் நுழைகின்ற பொழுது, இங்கே சில சகோதரிகள் என்னை அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார்கள். மேடையில் இருந்தவர்கள்கூட கனத்த முகத்துடனும், கண்களில் கண்ணீருடனும் உரையாடியதைப் பார்த்தோம்.

ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தன் வாழ்நாளில் தான் போட்டியிடும் இடங்களில் தோல்வியை காணாத ஒரு தலைவர் என்றால் அது தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால் பொது வாழ்க்கையில் இயக்கத்தின் எத்தனையோ தோல்விகளை தன் தோளில் சுமந்த தலைவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

மக்கள் பணியில் அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தை விட, ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் எதிர்க்கட்சியாகப் பணியாற்றிய காலங்கள்தான் அதிகம். ஆனால், அவர் தன்னுடைய வாழ்க்கையில் தாரக மந்திரம் என்பது நாம் ஒருவருக்கு நல்லது செய்கிறோம் என்றால் அவர்கள் அதற்காக நன்றியோடு இருப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அப்படி இல்லை என்ற காரணத்திற்காக நாம் நன்மை செய்வதை நிறுத்தி விடக் கூடாது. தொடர்ந்து அவர்களுக்காகப் பணியாற்ற வேண்டியது நம்முடைய கடமை என்று தன் வாழ்நாள் தாரக மந்திரமாக ஏற்றுக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள்.

அவருடைய பிறந்தநாளை நாம் கொண்டாடுகிறோம். நான் பல முறை பார்த்திருக்கிறேன். தேர்தல் முடிவுகள் இப்போதெல்லாம் ஒரு நான்கு மணி நேரத்துக்குள் தேர்தல் முடிவுகள் தெரிந்து விடுகின்றன. முன்னாளில் வாக்கு எண்ணுபவர்கள் பெட்டியைத் திறந்து எண்ணி, தகராறு நடக்கும், சண்டை நடக்கும், எல்லாவற்றையும் தாண்டி அதன் முடிவுகள் மாலை வர வரத்தான் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும்.

அப்படி மதியம் எல்லாம் ஒரு இறுக்கமான சூழல் இருக்கும். அதைத் தாண்டி மாலை வர வர தோல்வியா வெற்றியா என்பது ஏறத்தாழ உறுதி செய்யப்படும் அந்த நேரத்தில்தான், “அடுத்த நாள் நன்றி அறிவிப்புக் கூட்டம்” என்று அறிவித்த தலைவர் தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

அடுத்த நாள் முரசொலியில் கழக உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதிய தலைவர் தான் தலைவர் கலைஞர் அவர்கள். அடுத்து பணி என்ன, அடுத்து போராட்டம் என்ன, அடுத்து ஆர்ப்பாட்டம் என்ன, மக்களுக்காக எதற்காகக் குரல் கொடுக்க வேண்டும், எதற்காகப் போராட வேண்டும் என்ற கருத்துகளை நாம் அங்கே சட்டமன்றத்தில் எடுத்து வைத்து, அங்கே வாதாட வேண்டும், பேச வேண்டும், யார் எதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அடுத்த நிமிடமே சிந்திக்கத் தொடங்கிய தலைவன் தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதனால், வெற்றிகளும் தோல்விகளும் நம்முடைய இயக்கத்திற்கு புதிதல்ல. இந்தத் தோல்வியைக் கண்டு மனம் தளரவோ, கண்ணீர் வடிக்கவோ அவசியமில்லை. ஒரு மகிழ்ச்சியான விஷயம் என்னவென்றால், வீரியத்தோடும், தைரியத்தோடும், அடக்கத்தோடும், தெளிவோடும் பேசக்கூடிய எத்தனை பெண்களை கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை, நாம் எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் உணரத் தொடங்கியிருக்கிறோம். இதற்காக நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

**தமிழ்நாட்டு மக்கள்**
**தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்!**

பல திட்டங்களை முன்னாள் முதலமைச்சர் உருவாக்கித் தந்துள்ளார். அந்தத் திட்டங்கள் தொடருமா என்ற கவலை அனைவருக்கும் இருக்கிறது. அந்தக் கவலை நமக்கும் இருக்கிறது; வாக்களித்த மக்களுக்கும் இருக்கிறது. சிலர், ‘ஒரு ஓட்டுதானே’ என்று சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அது எப்படி என்று நினைத்து அவர்கள் வாக்களித்தார்கள் என்பது தெரியவில்லை.

முன்னாள் முதலமைச்சர் கொண்டு வந்த திட்டங்கள் தொடர்ந்து செயல்படுமோ, இல்லையோ என்ற கவலையில் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் விஜய் பதவியேற்ற நாளிலேயே என்ன சொன்னார்? ‘பணம் இல்லை’ என்றார். அதன்மூலம், அந்தத் திட்டங்கள் தொடருமா என்ற சந்தேகத்திற்கான அடித்தளத்தை முதலில் அவரே உருவாக்கிவிட்டார்.

தலைவர் கலைஞர் அடிக்கடி சொல்வார், ‘எது நடந்தாலும் என் மீதுதான் பழி போடுவார்கள்’ என்று. அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. இன்று பெண்களுக்கு எதிரான குற்றங்களும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களும் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத சூழலில் இந்த அரசு இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நடைபெறும் குற்றங்களை பற்றி கேட்டால், அதற்கு திமுக ஆட்சிதான் காரணம் என்று சொல்கிறார்கள், எப்படி? மக்கள் நலத் திட்டங்கள் தொடருமா என்று கேட்டால், திமுக ஆட்சியில் நிதிநிலை ஒன்றும் இல்லாமல் செய்துவிட்டு சென்று விட்டார்கள் என்று பதில் சொல்கிறார்கள். நான்கு மணி நேரம் மின்தடை ஏற்பட்டது என்று கேட்டால், ‘பியூஸை எடுத்து சென்று விடுகிறார்கள்’ என்று அமைச்சர் விளக்கம் அளிக்கிறார்.

இப்படி, எதற்கு எடுத்தாலும் முந்தைய திமுக அரசை குறை சொல்வது தான், அவர்களுக்கு தெரிந்த பதில். எந்தப் பிரச்சினையை யும் தீர்ப்பதற்கோ, அதைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்கோ அவர்கள் தயாராக இல்லை.

முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்பு, பத்து ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. அந்த ஆட்சி எவ்வாறு நடைபெற்றது என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக, கொரோனா பேரிடர் காலத்தில் மக்களை காப்பாற்ற தவறிய ஒரு ஆட்சி நடைபெற்றது.

நமது தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்பே, தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டோம் என்பது உறுதியானவுடன் அதிகாரிகளை அழைத்து, கொரோனா பேரிடரிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்று ஆலோசித்து செயல்படத் தொடங்கினார். மக்களின் நலனையே முதன்மையாகக் கருதி சிந்தித்த ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி. ஆனால் இன்று, ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகும், பொறுப்பு இல்லாமல் பேசிக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு சூழலை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

**ஸ்டிக்கர் ஒட்டி திட்டத்தை அறிவிக்கிறார்!**

‘சிங்கப்பெண் படை’ என்று இருந்த திட்டத்தை, ‘காப்பி-பேஸ்ட்’ செய்து, ஸ்டிக்கர் ஒட்டுகிறார்கள். என்னென்ன திட்டங்கள் இருக்கிறது என்று அவர்களுக்கு தெரியவில்லை. முதன்முதலாக பெண்களை காவல் துறைக்கு கொண்டுவந்து தலைவர் கலைஞர். பெண்கள் பாதுகாப்புக்காக ஒரு தனியான பிரிவை உருவாக்கியது முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியாகும்

இன்றைக்கு புதிதாக ஒரு சீருடையை வழங்கினால், புதிய திட்டமாக மாறிவிடுமா? இந்த ஆட்சியில், தயவுசெய்து பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள். எதை செய்ய முடியுமோ, அதை மட்டும் தேர்தல் அறிக்கையாக கொடுங்கள் என்று முன்னாள் முதலமைச்சர் சொன்னார். எதை செய்கிறோம், அதை செய்கிறோம் என்று மக்களை ஏமாற்றாதீர்கள். நாம் நினைத்து இருந்தால், எதை வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம். ஆனால், செய்ய முடியுமோ அதை மட்டுமே தேர்தல் அறிக்கையில் இருந்தது.

இன்றைக்கு ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள், எதையெதையோ சொன்னார்கள். 6 சிலிண்டர் தருகிறோம் என்று. தற்போது ஒரு சிலிண்டர் கிடைப்பது கனவாக மாறிக்கொண்டு இருக்கும் சூழலில் 6 சிலிண்டர் வரும், ஆனா!

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் போது, மாநிலத்தின் நிதிநிலை குறித்து திமுக அமைச்சர்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். ஆனால், தேர்தல் நேரத்தில் நினைத்ததையெல்லாம் வாக்குறுதியாகக் கூறிவிட்டு, தேர்தல் முடிந்தவுடன், நிதி இல்லை என்று சொல்கிறார்கள். நாம் ஆட்சி பொறுப்போக்கு வந்தபோது, தமிழ்நாடு நிதிமிகை மாநிலமாக இல்லை.

ஒரு வளர்ந்து வரும் மாநிலம், மக்களுக்காகச் செலவிட நிச்சயமாகக் கடன் வாங்கும். இது அடிப்படை பொருளாதாரம். கடன் வாங்குவதற்கு ஒரு வரம்பு உள்ளது; அந்த வரம்பைத் தாண்டக்கூடாது. தமிழ்நாடு அந்த வரம்பை ஒருபோதும் தாண்டவில்லை. உங்களைவிட நூறு மடங்கு ஒன்றிய அரசை எதிர்த்தவர்கள் நாங்கள்; இப்போதும் தொட ர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் கொடுக்கவில்லை.

ஆனாலும், தமிழ் மக்களைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்கு தேவையான திட்டங்களை வழங்குவதிலும் தமிழ்நாடு முன்மாதிரியாக இருந்தது. நாடு முழுவதும் உள்ள பல மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து, இங்குள்ள திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை கற்றுக்கொண்டு சென்ற நிலை இருந்தது.

இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய முதலீடுகள் எங்கே செல்கின்றன என்று தெரியவில்லை. அவை பிற மாநிலங்களுக்குச் செல்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிற்கு பல லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக, வருத்தத்தோடு இதைச் சொல்கிறேன். என்னுடைய தூத்துக்குடி தொகுதியில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலை வர வேண்டியிருந்தது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தாகியிருந்தது. ஆனால், தற்போது அந்தத் திட்டம் இல்லை.

ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரக்கூடிய ஒரு தொழிற்சாலை அது. உப்பளங்களில் கடினமாக உழைத்துக் கொண்டிருந்த மக்களுக்கு ஒரு மாற்றுப் பாதையையும், சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்கித் தரக்கூடிய வாய்ப்பாக அது இருந்தது. ஆனால், அந்தத் தொழிற்சாலை இன்று இல்லை. இதுதான் மாற்றமா?

இந்த மாற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. திராவிட முன்னேற்றக் கழகம் தனது கடமையைச் செய்வதில் என்றுமே தவறியதில்லை. ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோமா இல்லையா என்பது குறித்து திமுகவினருக்கு கவலையே கிடையாது.

தலைவர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகளுக்கு, மக்களைப் பாதுகாப்பதுதான் நம்முடைய கடமை. அதனால், ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், தொடர்ந்து மக்களுக்காகப் பாடுபடுவோம்; மக்களுக்காகப் போராடுவோம். மக்கள் எந்த முடிவை எடுத்தாலும் அது குறித்து எங்களுக்கு வருத்தமில்லை. ஆனால், நம்முடைய முடிவு ஒன்றுதான். தமிழ்நாட்டு மக்களுக்காக எப்போதும் பணியாற்றுவோம் என்பதுதான் என்று பேசினார்.

இந்த நிகழ்வில், சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., திமுக மாணவர் அணி செயலாளர் ஈரோடு.வீரமணி, சென்னை மாநகராட்சி மேயரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான பிரியா ராஜன், தி.மு.க. செய்தி தொடர்புக்குழு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சென்னை கிழக்கு மாவட்டக் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், திமுக மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### மக்கள் நலம் காக்கும் திட்டங்களைத் தந்த திராவிட மாடல் அரசின் நாயகர் —

# தமிழ்நாட்டை சிறந்த மாநிலமாக மாற்றிய கழகத் தலைவருக்கு தாம்பரம் மாநகராட்சி நன்றி!

## மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை கொண்டு வந்த தீர்மானம் மேயர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றம்!

பல்லாவரம், ஜூன்.13-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி - தாம்பரம் சட்டமன்றத் தொகுதி உட்பட்ட பகுதிகளில் இருந்த பல்லாவரம் நகராட்சி தாம்பரம் நகராட்சி பம்மல் நகராட்சி அனகாபுத்தூர் நகராட்சி திருநீர் மலை பேரூராட்சி ஆகிய பகுதிகளை இணைத்து கடந்த 2021 ஆம் ஆண்டு நமது திராவிட மாடல் அரசின் நாயகர் முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் தளபதி அவர்கள் தாம்பரம் மாநகராட்சி உருவாக்கினார்.

அன்று முதல் தாம்பரம் மாநகராட்சியை நமது கழகத்தைச் சேர்ந்த பெரும்பாலன உறுப்பினர்கள் கைப்பற்றி மேயர் துணை மேயர் மண்டல தலைவர்கள் என கழகத்தைச் சேர்ந்தவர் பொறுப்புக்கு வந்து நல்ல முறையில் மக்கள் போற்றும் வகையில் மாநகராட்சி நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு 11 62026 அன்று காலை 10 மணி அளவில் மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் துணை மேயர் கோ.காமராஜ் முன்னிலையில் தாம்பரம் மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் தங்கள் வார்டுகளில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு மக்கள் நலப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் 2வது மண்டலம் (பல்லாவரம்) தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை நமது திராவிட மாடல் அரசின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2021 முதல் 2026 வரை இந்திய திருநாடே திரும்பிப் பார்க்கும் அளவில் நம்பர் ஒன் முதலமைச்சராக சிறப்பான ஆட்சியை தந்து தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களும் 50 ஆண்டுகள் முன்னோக்கிச் செல்லும் வகையில் பல்வேறு நல திட்டங்களையும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் நிச்சயமாக பயன் பெரும் வகையில் மக்கள் நலம் காக்கும் திட்டங்களையும் நிறைவேற்றி தந்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு நமது தாம்பரம் மாநகராட்சி உருவாக்கி தந்தது மட்டும் இல்லாமல் ஜிஎஸ்டி சாலையிலேயே மிகப் பிரம்மாண்ட மான மாநகராட்சி அலுவலகம் கட்டிடத்தின் கட்டி தந்தது மட்டுமின்றி மேலும் பல்வேறு மக்கள் நலம் போற்றும் பன்னோக்கு திட்டங்களை நிறைவேற்றி பார் போற்றும் நல்லாட்சி தந்த நமது திராவிட மாடல் அரசின் நாயகர் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை இந்த மாமன்றம் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் எனக்கேட்டு தீர்மானத்தை கொண்டு வந்தார்.

மேயர் தீர்மானத்தை சபையின் கோரிக்கைக்கு விடுத்து அனைத்து உறுப்பினர்களும் மேஜையைத் தட்டி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

அதைத்தொடர்ந்து காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர் செந்தில்குமார் த.வெ.க அரசுக்கு வாழ்த்து தெரிவிக்குமாறு பேசினார்.

அதற்கு ஆட்சிக்கு வந்த 25 நாட்களில் மின்வெட்டு காரணமாக ஊரே இருளில் மூழ்கி சிரிப்பா சிரிக்கிறது. ஆகவே நாங்கள் வாழ்த்து தெரிவிக்க முடியாது. முடிந்தால் நீங்கள் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என ஜோசப் அண்ணாதுரை தெரிவித்தார். இவ்வாறு விவாதங்கள் நடைபெற்றன.

அதைத் தொடர்ந்து 331 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன .

தாம்பரம் மாநகராட்சியில் முன்னாள் முதல்வர் கழகத் தலைவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதை கண்டு ஒவ்வொரு கழக மாமன்ற உறுப்பினர்களும் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெருவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்.

# சைதை கிழக்கில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கை!

சென்னை, ஜூன்.13-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவையொட்டி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13.06.2026 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில், மடுவின்கரை பிள்ளையார் கோவில் தெரு (மீட்டிங் பாயிண்ட்) பகுதியில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், 13வது மண்டலக்குழு தலைவர் சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில், திராவிட கழக துணை பொது செயலாளர் சே.ம.மதிவதனி, வழக்கறிஞர் அலிம் அல்புகாரி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்,

மேலும் சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் மாமன்ற உறுப்பினர் தா. மோகன்குமார், பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி, வட்ட கழக செய்லாளர்கள் நேருநகர் எஸ்.பாட்சா, வே.முருகன், நா. ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், சைதை ஆ.வரதன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம் ஆகியோர் முன்னிலையில், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் தி. கோகுல் நன்றியுரையில் நடைபெற உள்ளது.

ஆகவே நமது பகுதியில் உள்ள பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், மகளிர் அணியினர், பாக முகவர்கள், உள்ளிட்ட கழக நண்பர்கள், கழக முன்னோடிகள், அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.